**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,LLM.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 நாள் வியாழக்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ம் நாள்)

**அசல் வழக்கு எண்.42/2019**
**(CNR No:TNSV160004602019)**

*****

சின்னப்பிரமன் .... வாதி

/எதிர்/

1. அழகம்மாள்
2. ஆண்டிச்சாமி
3. சின்னம்மமாள்
4. ஆண்டிக்காளை .... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கு திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 09.04.2012–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றே அசல் வழக்கு எண்.79/2012 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.42/2019 என எண்ணிடப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம்.அண்ணாமலை அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.தங்கபாண்டி அவர்கள் முன்னிலையாகியும், 16.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு வாதம் ஆகியவற்றை ஓர்வு செய்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. சர்வே எண்:18/6 ல் தென்புறம் கிழமேலாக 30 அடி நீளம் 2 அடி அகலத்தில் வரைபடத்தில் காட்டப்பட்ட ஏ.பி.சி.டி பகுதி வாதியின் நிலத்துக்கு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:55:02 +0530

செல்லக் கூடிய பொது வாய்கால் என்று விளம்புகை செய்ய கோரியும், தாவா வாய்கால் வழியாக தண்ணீர் பாய்ச்சுவதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித தடையும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சர்வே எண்:18/6 ல் பிரதிவாதிகள் அழித்து விட்ட தாவா வாய்காலை பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொடுக்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:-**

2(1). தாவா சொத்து மின்னமலைப்பட்டி கிராமத்தில் உள்ளது. வரைபடத்தில் காட்டப்பட்ட ஏபிசிடி பகுதி தாவா சொத்தாகும். தாவா சொத்து கிழமேல் சுமார் 30 அடி நீளமும், தென்வடல் அகலம் 2 அடி உள்ள வாய்கால் ஆகும். தாவா வாய்கால் சர்வே எண்:18/6 ஆகும். 1 ம் பிரதிவாதியின் கணவரும், 2 ம் பிரதிவாதியின் தந்தையும், வாதியின் மூத்த சகோதரருமான வெள்ளைகண்ணு பாகத்திற்கு கிடைத்தது.

2(2) தாவா வாய்காலுக்கு மேற்கே உள்ள கால்வாயில் இருந்து சர்வே எண்:18/7 மற்றும் வாதியின் உடன்பிறந்த சகோதரர்களின் பாகங்களான சர்வே எண்கள்:18/6, 18/7, 18/8, 18/9, 18/16, 18/19 ஆகியவற்றிற்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது. வெள்ளைகண்ணு, சின்னையா, பிரம்மன், அடைக்கன், ஆண்டிக்காளை, சின்னபிரமன் ஆகிய உடன்பிறந்த சகோதரர்களுக்குள் வைகாசி மாதம் 27 ம் தேதி ஏற்பட்ட பாக முறியடி பிரிக்கப்பட்டது. மேற்படியார்களுக்கு பொது பாத்தியமான பெரிய வயலில் உள்ள கிணற்றில் இருந்து மேற்படி சர்வே எண்களுக்கும் தண்ணீர் பாய்ச்ச வாய்கால் உண்டு என்றும் பாக முறியில் எழுதப்பட்டுள்ளது. அதன்படி கிணற்று தண்ணீர் மற்றும் கால்வாயில் வரும் கண்மாய் மற்றும் பிரான்மலையில் இருந்து வரும் மழை தண்ணீரும் வழக்கமாக தாவா வாய்கால் வழியாக பாய்ச்சபட்டு வந்து மேற்படி பாக முறியில் வாய்கால் சம்பந்தமாக நாங்கள் ஆறுபேரும் எந்த தகராறும் செய்ய

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:55:17 +0530

மாட்டோம் என ஒப்புக் கொண்டுள்ளனர்.

2(3). வாதியும் மூத்த சகோதரர் பாகம் தவிர ஏனைய சகோதரர்களின் பாகத்தையும் கிரையம் பெற்று பட்டா பெற்று அனுபவித்து வருகிறார். 2ம் பிரதிவாதி ஆண்டிசாமி மற்றும் வாதியின் சகோதரர் சின்னையா, பிரமன் ஆகியோர்களுக்கும் வாதியின் மற்றொரு சகோதரர் அடைக்கனுக்கும் கடந்த 12.10.2011ம் தேதி பாதை சம்பந்தமாக சண்டை ஏற்பட்டதால் போலீசில் புகார் செய்யப்பட்டு ஆண்டிசாமி, சின்னையா, பிரமன் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் வாதியை சாட்சியாக சேர்த்திருந்ததால் பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து 14.10.2011ம் தேதி தாவா வாய்காலை அழித்து விட்டனர். இது சம்பந்தமாக வாதி உலகம்பட்டி போலீசில் புகார் செய்து யாதொரு பலனும் இல்லை. பின்னீடு வாதி ஊரில் உள்ள முக்கியஸ்தர்களிடம் கூறி வாய்காலை ஏற்படுத்தி கொடுக்கும் படி கூறியதில், பிரதிவாதிகளும் காலம் கடத்தி வந்து தற்போது 20.03.2012ல் வாய்கால் விட முடியாது முடிந்ததை பார்த்து கொள் என்று கூறிவிட்டனர்.

2(4). பிரதிவாதிகள் தாவா வாய்காலை அழித்ததினால் வாதி தன்னுடைய நிலத்துக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போய்விட்டது. அமரவள்ளி கண்மாய் மற்றும் பிரான்மலையில் இருந்து வரும் தண்ணீர் தான் பிரதான பாசனமாகும். அதை தடுக்க பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும் கிடையாது. தாவா வாய்கால் பாகம் செய்து கொண்ட காலம் முதல் இருந்து வந்தது. தற்போது பாகம் முறிவுக்கு விரோதமாக வாய்காலை அழித்துள்ளதால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.<u>பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:–**

3(1). பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. வாதி தரப்பில் தாவா சொத்தை அடையாளம் காட்டவில்லை. மேலும், இவ்வழக்கு காலவரையறைச் சட்டத்தின் (Limitation Act) கீழ் தடைபட்டுள்ளது. வாதி தரப்பில்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:55:25 +0530

தாக்கல் செய்துள்ள வரைபடம் (sketch), தாவா சொத்தின் உண்மையான இயற்கை அமைப்புகளை காட்டவில்லை. மேலும் வழக்கு சொத்தின் அளவுகளும், திசைகளும் சரியானவை அல்ல. வழக்கு சொத்து அமைந்துள்ள பகுதி வானம் பார்த்த பூமியாகும் (மழைநீரை மட்டுமே நம்பியுள்ள பகுதியாகவே).வழக்கு சொத்திற்கு ஏரி பாசன வசதி ஏம் இல்லை. வைகாசி மாதத்தில் 'பாக முறியடி' (பங்குப் பிரிப்பு ஆவணம்) மூலம் சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளப்பட்டது. வழக்கு சொத்திற்கும் மேற்கூறிய கிணற்றிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள தாவா சொத்திற்கு கிணறற்றிலிருந்து பாசம் பெற்றதில்லை. பாக முறியடியில் குறிப்பிட்டுள்ள வாய்கால் வழக்கு சொத்துடன் தொடர்புடையதல்ல என்றும் அந்த கிணற்றுடன் தொடர்புடைய நிலங்கள் மற்றும் வாய்காலுடன் மட்டுமே தொடர்புடையது. 'பாக முறியடி' ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிணறும் பாசனக் கால்வாயும், இவ்வழக்கு சொத்தாக கூறப்படும் இடத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவையாகும். வழக்கு ஆவணங்களில், வா.சா.ஆ.1 யை தவிர மற்ற அனைத்தும் வாதியின் சுயநலத்திற்காகவே உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. **<u>வழக்கெழுவினாக்கள்</u>:-**

1. Whether the plaintiff is entitled to declaration as prayed for in the plaint?
2. Whether the plaintiff is entitled to permanent injuction as prayed for in the plainti?
3 Whether the plaintiff is entitled to Mandatory injuction as prayed for by him in the plaint?
4 Whether the plaintiff is entitled to cost?
5. To what relief is the plaintiff entitled?

**5. <u>சான்றுகள்</u>:-**

வாதி தரப்பில் வாதி சின்னபிரம்மன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு,

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:55:31 +0530

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வாதி தரப்பில் தூங்கன் என்ற அழகு வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி ஆண்டிசாமி என்பவர் பி.வா.சா.ஆ.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். சான்றவாணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணங்களாக நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. வழக்கெழுவினா 1 முதல் 3 -ன் தீர்முடிவு:–**

1. Whether the plaintiff is entitled to declaration as prayed for in the plaint?
2. Whether the plaintiff is entitled to permanent injuction as prayed for in the plainti?
3 Whether the plaintiff is entitled to Mandatory injuction as prayed for by him in the plaint?

6(1). சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, மின்னமலைப்பட்டி கிராமத்தில் சர்வே எண்:18/6ல் தென்புறம் கிழமேல் 30 அடி நீளம் தென்வடல் 2 அடி அகலம் பொதுவாய்கால் அதாவது வரைபடத்தில் காட்டப்பட்ட ஏபிசிடி பகுதி என்பது வழக்குச் சொத்தாகும்.

6(2). வாதி தரப்பில், தாவா சொத்து மின்னமலைப்பட்டி கிராமத்தில் உள்ளது. வரைபடத்தில் காட்டப்பட்ட ஏபிசிடி பகுதி தாவா சொத்தாகும். தாவா வாய்காலுக்கு மேற்கே உள்ள கால்வாயில் இருந்து சர்வே எண்:18/7 மற்றும் வாதியின் உடன்பிறந்த சகோதரர்களின் பாகங்களான சர்வே எண்கள்:18/6, 18/7, 18/8, 18/9, 18/16, 18/19 ஆகியவற்றிற்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது என்றும் வெள்ளைகண்ணு, சின்னையா, பிரம்மன், அடைக்கன், ஆண்டிக்காளை, சின்னபிரமன் ஆகிய உடன்பிறந்த சகோதரர்களுக்குள் வைகாசி மாதம் 27ம் தேதி ஏற்பட்ட பாக முறியடி பிரிக்கப்பட்டது என்றும் கிணற்று தண்ணீர் மற்றும் கால்வாயில் வரும் கண்மாய் மற்றும் பிரான்மலையில் இருந்து வரும் மழை தண்ணீரும் வழக்கமாக தாவா வாய்கால் வழியாக பாய்ச்சபட்டு வந்து மேற்படி பாக

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:55:37 +0530

முறியில் வாய்கால் சம்பந்தமாக நாங்கள் ஆறுபேரும் எந்த தகராறும் செய்ய மாட்டோம் என பாக முறியடியில் ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் வாதியும் மூத்த சகோதரர் பாகம் தவிர ஏனைய சகோதரர்களின் பாகத்தையும் கிரையம் பெற்று பட்டா பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து 14.10.2011 ம் தேதி தாவா வாய்காலை அழித்துள்ளதால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

6(3). பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பில் தாவா சொத்தை அடையாளம் காட்டவில்லை என்றும், இவ்வழக்கு காலவரையறைச் சட்டத்தின் (Limitation Act) கீழ் தடைபட்டுள்ளது என்றும் வழக்கு சொத்து அமைந்துள்ள பகுதி வானம் பார்த்த பூமி (மழைநீரை மட்டுமே நம்பியுள்ள பகுதியாகும்) என்றும் வழக்கு சொத்திற்கு ஏரி பாசன வசதி ஏதும் இல்லை என்றும் வழக்கு சொத்திற்கும் மேற்கூறிய கிணற்றிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள தாவா சொத்திற்கு கிணற்றிலிருந்து பாசம் பெற்றதில்லை என்றும் பாக முறியடியில் குறிப்பிட்டுள்ள வாய்கால் வழக்கு சொத்துடன் தொடர்புடையதல்ல என்றும் 'பாக முறியடி' ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிணறும் பாசனக் கால்வாயும், இவ்வழக்கு சொத்தாக கூறப்படும் இடத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவையாகும் என்று பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

6(4). வாதி தரப்பில் தாவா வாய்காலிலிருந்து வாதியின் வயலுக்கு தண்ணீர் வரும் என்று கூறப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்திற்கும் வாய்காலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே வாதியின் வயலுக்கு தாவா சொத்து வாய்காலிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படுமா? என்பதை முதலில் ஆராய்ந்து கண்டறிய வேண்டியது அவசியமாக உள்ளது.

6(5). வாதி சின்னபிரமன் தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 ஆவணமானது

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:55:44 +0530

பாகமுறியடியாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் வைகாசி 27ம் தேதி மின்னமலைபட்டி ஊர் முன்பாக வெள்ளைகண்ணு, சின்னையா, பிரமன், அடைக்கன், ஆண்டிக்காளை, சின்னபிரமன் ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட பாகமுறி குறிப்பேடு என்பது தெரிய வருகிறது.

6(6). வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மின்னமலைபட்டி கிராமம் சர்வே எண்:18/16ல் 3.00 ஹெக்டேர், சர்வே எண்:18/19ல் 2.50 ஹெக்டேர், சர்வே எண்:18/7ல் 3.50 ஹெக்டேர், சர்வே எண்:18/8ல் 2.50 ஹெக்டேர், சர்வே எண்:18/9ல் 2.00 ஹெக்டேர் ஆகியவற்றிற்கு பட்டா எண்:575 என பிரமன் மகன் சின்னபிரமன் பெயரில் 10(1) பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

6(7). வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் 15.10.2011ம் தேதி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, மின்னமலைபட்டி கிராமத்தில் வசிக்கும் பிரமன் மகன் சின்னபிரமன் என்பவர் தனது வயலுக்கு வரும் தண்ணீரை அடித்து விட்டதாக கூறி உலகம்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார்மனு என்பது தெரிய வருகிறது.

6(8). வா.சா.ஆ-4 ஆவணத்தை பரிசீலிக்கையில் 26.01.2012ம் தேதி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, மின்னமலைபட்டி கிராமத்தில் வசிக்கும் பிரமன் மகன் சின்னபிரமன் என்பவர் தனது வயலுக்கு வரும் தண்ணீரை அடித்து விட்டதாக கூறி உலகம்பட்டி காவல்நிலையத்தில் மீண்டும் கொடுத்த புகார்மனு என்பது தெரிய வருகிறது.

6(9). வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் 27.02.2012ம் தேதி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, மின்னமலைபட்டி கிராமத்தில் வசிக்கும் பிரமன் மகன் சின்னபிரமன் என்பவர் கொலை மிரட்டல் செய்ததாக ஆண்டிசாமி, அழகம்மாள், சின்னம்மாள், கருப்பையா, தவமணி ஆகியோர்கள் மீது சிவகங்கை மாவட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார்மனு என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணமானது சிவகங்கை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:55:50 +0530

மாவட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார்மனுவின் அஞ்சலக ஒப்புதல் அட்டை என்பது தெரிய வருகிறது.

6(10). வாதி தனது பிராதில் தாவா வாய்கால் சர்வே எண்:18/6 ஆனது 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையும் வாதியின் மூத்த சகோதரருமான வெள்ளைகண்ணு பாகத்திற்கு கிடைத்தது என்று கூறியுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் தனது சகோதரர்களான வெள்ளைகண்ணு, சின்னையா, பிரம்மன், அடைக்கன், ஆண்டிக்காளை ஆகியோர்களுடன் பாக முறியடி பிரிக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். பி.வா.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் தாவா சொத்து உள்ளிட்ட இன்னும் பல சொத்துக்கள் சம்பந்தமாக வாதிக்கும் எனது தகப்பனாருக்கும் இடையே பாக முறியடி ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும் மேற்படி முறியடியில் சொல்லப்பட்ட படி தான் நாங்கள் சொத்துக்களை பாத்தியம் அடைந்து தற்பொழுது அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(11). வா.சா.ஆ-1 ஆவணத்தை பரிசீலிக்கையில் சோபகிருது வைகாசி மாதம் 27ம் தேதி மின்னமலைபட்டியில் இருக்கும் கொ.பிரமன் மகன் ஆறு பேர்களும் தகப்பனாருக்கு விட்டிருந்த நிலத்தை நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ. 1 ஆவணமானது ஏற்கனவே பாகம் பிரித்து கொண்டதற்காக வாதி மற்றும் அவரது சகோதரர்களின் ஞாபகத்திற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்பது தெரிய வருகிறது. எனவே வா.சா.ஆ.1 ஆவணமானது பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

6(12). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பாகமுறியடியில் சொல்லப்பட்ட படி தான் நாங்கள் சொத்துக்களை பாத்தியம் அடைந்து தற்பொழுது அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பிரதிவாதிகள் தரப்பில் பாகபிரிவினை செய்து கொண்டதாக ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:55:56 +0530

6(13). வாதி தனது பிராதில் தாவா வாய்காலுக்கு மேற்கே உள்ள கால்வாயில் இருந்து வாதியின் சர்வே எண்:18/7 மற்றும் வாதியின் உடன்பிறந்த சகோதரர்கள் பாகத்திற்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது என்றும் அதாவது சர்வே எண்:18/6, 18/7, 18/8, 18/9, 18/16, 18/19 ஆகியவை என்று கூறியுள்ளார்.

6(14). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் வாதியின் சொத்து உள்ளது என்றும் தாவா சொத்திற்கு மேற்கே மேற்படி கால்வாயிலிருந்து தாவா சொத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு மடை உள்ளது என்றால் இல்லை என்றும் தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள வாதியின் சொத்தில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வாய்கால் உள்ளது என்றால் சரிதான் என்றும் வாய்கால் வாதியின் சொத்திற்கு தெற்கு ஓரத்தில் உள்ளது என்றால் சரிதான் என்றும் மேற்படி வாய்கால் வாதிக்கு பாத்தியப்பட்ட 4 சொத்திற்கும் செல்கிறது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தை பரிசீலிக்கையில் மேற்கே கால்வாயிலிருந்து சர்வே எண்:18/6,18/7, 18/8, 18/9, 18/19, 18/16 க்கு தண்ணீர் செல்கிறது என்பது தெரிய வருகிறது.

6(15). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கிணற்றிலிருந்து பாசனம் எடுத்து கொள்ள வேண்டும் என்று மேற்படி முறியடியில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணத்தடியில் இருந்து அனைத்து இடத்திற்கும் தண்ணீர் போக வாய்கால் உண்டு, இதில் எந்த தகராறும் நாங்கள் 6 பேரும் செய்யமாட்டோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தில் வாய்கால் உள்ளது என்பது தெரிய வருகிறது.

6(16). நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையினை பரிசீலிக்கையில் 2ம் பிரதிவாதி ஆண்டிசாமி பெயரில் சர்வே எண்:18/6 நிலத்தில் எந்த ஒரு வாய்காலோ, நீர் செல்லும் வழியோ ஸ்தலத்தில் கிடையாது என்றும் சர்வே எண்:18/6 ல வடக்கிலிருந்து தெற்கு பக்கமாக எந்த ஒரு வாய்காலோ நீர் செல்லும்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:02 +0530

வழியோ காணப்படவில்லை என்றும் வருவாய்துறை ஆவணங்களிலும் எந்த ஒரு வாய்காலோ, நீர் செல்லும் வழியோ கிடையாது என ஆவணங்களில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

6(17). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்துக்கு தற்போது பட்டா தனது பெயரில் உள்ளது என்றும் இதற்கு முன்பு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையை பரிசீலிக்கையில் சர்வே எண்:18/6 ல் 0.5.50 ஏர்ஸ் இடம் 2ம் பிரதிவாதியான ஆண்டிசாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதை கிராம நிர்வாக அலுவலர் உதவியுடம் அளந்து வரைபடம் தயாரிக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

6(18). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வாய்கால் தான் அனுபவித்து கொண்டிருக்கின்ற சொத்தின் வழியாக வருகிறதா என்றால் எனது சித்தப்பா பிரமன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் வழியாக வந்து கடைசியில் எனது சொத்திற்கு வருகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி 1ம் பிரதிவாதியின் கணவர் ஆண்டிசாமி வாதியின் சகோதரர் என்பதால் பாக பிரிவினையில் சர்வே எண்:18/6 ஆண்டிசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்:18/6 அருகில் வாய்கால் உள்ளதால் மேற்படி வாய்காலிலிருந்து தண்ணீர் தாவா சொத்திற்கு வரும் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா சொத்தில் வாய்கால் உள்ளது என்பது தெரிய வருகிறது.

6(19). நீ.ம.சா.ஆ 1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண்கள்:18/7, 18/8, 18/9, 18/19 ஆகியவற்றில் வாதி மற்றும் அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வருவதால் அவர்களின் பயன்பாட்டில் மட்டும் கை வாய்கால் அமைத்து விவசாயம் செய்து வருவதை நிலஅளவையரின் வரைபடத்தில் வடக்கில் இருந்து தெற்காக சிவப்பு வண்ணமிட்ட பகுதியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:08 +0530

6(20). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் மழை பெய்தால் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருவோம் என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் தாவா பெரிய கிணறு உள்ள வயல் மற்றும் நீர்பாசன வசதி பெறும் இடங்கள் அனைத்தும் செட்டியார் பெயரில் தான் உள்ளது என்றாலும் அதில் எனக்கு உழவடை பாத்தியம் மட்டும் தான் உள்ளது என்றாலும் முதலில் உழவடை பட்டா வைத்து உழுது கொண்டிருந்தோம் என்றும் யூடிஆர் பட்டாவை வாங்கி விட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 தனது பிராதில் கிணற்று தண்ணீர் மற்றும் கால்வாயில் வரும் கண்மாய் மற்றும் பிரான்மலையில் இருந்து வரும் மழைதண்ணீர் வழக்கமாக தாவா வாய்கால் வழியாக பாய்ச்சபடும் என்று கூறியுள்ளார். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தினை பரிசீலிக்கையில் நீர்பிடி கைப்பற்று இல்லாததிலிருந்து சர்வே எண்:18/4 ல் (கால்வாய்) இருந்து சர்வே எண்:18/6, 18/7, 18/8, 18/9, 18/19 வழியாக தண்ணீர் வருகிறது என்பது தெரிய வருகிறது. எனவே சர்வே எண்:18/7, 18/8, 18/9, 18/19, 18/16 ஆகியவற்றில் தண்ணீர் வரும் வாய்கால் உள்ளதாக தெரிய வரும் நிலையில் கால்வாய் அருகில் இருக்கும் சர்வே எண்:18/6 ல் எபிசிடி பகுதியில் வாய்கால் அழிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**13. Easements of necessity and quasi-easements**

Where one person transfers or bequeaths immovable property to another,

(a). if an easement in other immovable property of the transferor or testator is necessary for enjoying the subject of the transfer or bequest, the transferee or legatee shall be entitled to such easement.

(b). if such an easement is apparent and continuous and necessary for enjoying the said subject as it was enjoyed when the transfer or bequest took effect, the transferee or legatee shall, unless a different intention is expressed or necessarily implied, be entitled to such easement.

(c). if an easement in the subject of the transfer or bequest is necessary, for enjoying other

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.26 17:56:14 +0530

immovable property of the transferor or testator, the transferor or the legal representative of the testator shall be entitled to such easement.

(d). if such an easement is apparent and continuous and necessary for enjoying the said property as it was enjoyed when the transfer or bequest took effect, the transferor, or the legal representative of the testator, shall, unless a different intention is expressed or necessarily implied, be entitled to such easement.Where a partition is made of the joint property of several persons.

(e). if an easement over the share of one of them is necessary for enjoying the share of another of them, the latter shall be entitled to such easement.

(f). if such an easement is apparent and continuous and necessary for enjoying the share of the latter as it was enjoyed when the partition took effect, he shall, unless a different intention is expressed or necessarily implied, be entitled to such easement.

வசதிஉரிமை சட்டம் பிரிவு 13 (e) ஆனது : பல நபர்களுக்குச் சொந்தமான கூட்டுச் சொத்து பிரிக்கப்படும்போது, அவர்களில் ஒருவரின் பங்கினை அனுபவிப்பதற்கு, அவர்களில் மற்றொருவரின் பங்கின் மீது ஒரு சலுகை உரிமை (easement) அவசியமாக இருக்குமாயின், பிந்தைய நபர் அத்தகைய சலுகை உரிமையைப் பெறத் தகுதியுடையவராவார். அதன்படி தாவா சொத்தானது பொதுவான சொத்து என்பதை வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்களை பாகம் பிரிக்கும் போது தாவா சொத்தில் தாவா வாய்கால் உள்ளது என்பதை வாதி, பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக் கொண்டுள்ள நிலையில், மேற்படி வாய்கால் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பொது பாத்தியமானது என்பது தெரிய வருகிறது.

6(21). நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில் தாவா சொத்தில் வாய்கால் இல்லை என்று கூறப்பட்டாலும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதி மற்றும் அவரது சகோதரர்களின் ஞாபகத்திற்காக உருவாக்கப்பட்ட பாகமுறியடியில் தாவா சொத்தில் பொதுவாய்க்கால் உள்ளது என்பதை வாதி தரப்பில் தகுந்த சாட்சிய

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:21 +0530

சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

6(22). மேற்கண்ட கூற்றுகளின் படி, வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா சொத்தில் வாய்கால் உள்ளதாக வாதி, பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், சர்வே எண்:18/6 ல் எபிசிடி பகுதியில் வாய்கால் அழிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

மேலே கண்ட விரிவான விவாதங்களின் அடிப்படையில், வாதி நலச்சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 பாகமுறியடி தகுந்த சாட்சிய சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ள நிலையிலும், தாவா சொத்தில் வாய்கால் இருந்தது என்பதையும், தாவா சொத்தின் சர்வே எண்:18/6 வாய்கால் அழிக்கப்பட்டுள்ளதை என்பதையும் வாதி தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ள நிலையிலும், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என 1 முதல் 3 எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7. வழக்கெழுவினா 4 மற்றும் 5 ன் மீதான தீர்முடிவு:**

4 Whether the plaintiff is entitled to cost?

5. To what relief is the plaintiff entitled?

வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு பார்க்கும் போது வாதிக்கு எந்தவொரு பரிகாரமும் வழங்குவதற்கில்லை என்றும் அவரவர் செலவுத்தொகையினை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறது.

**இறுதி முடிவு:**

1 இவ்வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. தாவா சர்வே எண்:18/6 ல் தென்புறம் கிழமேலாக 30 அடி நீளம் 2 அடி அகலத்தில் வரைபடத்தில் காட்டப்பட்ட ஏ.பி.சி.டி பகுதி வாதியின் நிலத்துக்கு செல்லக் கூடியது பொது வாய்கால் என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:28 +0530

3. தாவா வாய்கால் வழியாக தண்ணீர் பாய்ச்சுவதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித தடையும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது,
4. தாவா சர்வே எண்:18/6 ல் பிரதிவாதிகள் அழித்து விட்ட தாவா வாய்காலை 3 மாதத்திற்குள் பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.
5. அவரவர் செலவுத் தொகையினை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு மார்ச் 26–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| வா.சா.1 | சின்னபிரமன் (வாதி) |
| வா.சா.2 | தூங்கன் என்ற அழகு |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | வைகாசி 27ம் தேதியிட்ட பாகமுறியடி குறிப்பேடு அசல் |
| வா.சா.ஆ.2 | 09.12.2010 | பட்டா எண்:575 ன் 10(1) கணிணி பட்டா |
| வா.சா.ஆ-3 | 15.10.2011 | உலகம்பட்டி காவல்நிலையத்தில் அளித்த புகார்மனு நகல் |
| வா.சா.ஆ.4 | 26.01.2012 | உலகம்பட்டி காவல்நிலையத்தில் அளித்த புகார்மனு நகல் |
| வா.சா.ஆ-5 | 27.02.2012 | சிவகங்கை மாவட்ட காவல்கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார்மனு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | - | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | ஆண்டிசாமி (2 ம் பிரதிவாதி) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை**

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | | ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | | வரைபடம் |

**/ உண்மை நகல் /**

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.26 17:56:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி